2014

No. of Printed Pages : 4

2014

**4361**

Register Number

**Second Year** 701785

# தமிழ்மொழி கற்பித்தல்

நேரம் : 3 மணி ] [ உச்ச மதிப்பெண்கள் : 100

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி. **10x2=20**

**1.** 'கொடுக்குந் தகைமை' இச் சொல்லைப் பிரித்தெழுதிப் புணர்ச்சி விதி தருக.

**2.** கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்
- 'பிணி' என்னும் சொல் தரும் பொருள்களை எழுதுக.

**3.** வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

**4.** அள்ளற் பழனத்(து) அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம் தீப்பட்டதென வெரீஇ- புள்ளினம் தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேல் கோக்கோதை நாடு
- இச்செய்யுள் இடம்பெற்ற நூல் எது? கோக்கோதை எந்த நாடு?

**5.** 'வெற்றிலை போட்டான்' - இச் சொற்றொடர் இனங்குறித்தலுக்குச் சான்றாவது எங்ஙனம்?

**6.** குறிப்பு வினைமுற்று என்றால் என்ன?

**7.** நிலத்தியல்பான் நீர்திரிந்து அற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு
- இக் குறட்பாவில் உவமானம் எது? உவமேயம் எது?

[ Turn over

8. உம்மைத் தொகைக்குச் சான்று தந்து விளக்குக.

9. பாவின் நலமெல்லாம் - யானும் பகரவல்லேனோ?
ஆவின் பாற்சுவையை - நாழி அளந்து காட்டிடுமோ? - கவிமணி
- இச் செய்யுள் உணர்த்தும் நயத்தை விளக்குக.

10. விகாரப் புணர்ச்சியை விளக்குக.

II. **எவையேனும் ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் **200 சொற்களுக்கு** மிகாமல் விடையளிக்க. **5x4=20**

11. சிறுகதை எழுதும் திறனை வளர்க்க எத்தகைய பயிற்சிகளை மேற்கொள்வீர்?

12. ஈராறாண்டகலை, மருணீக்கியார் - இச்சொற்களைப் பிரித்து எழுதுக.

13. கூறியவர் யார்?
(அ) உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெ டுப்பது கவிதை
(ஆ) கவிதையை 'மொழிப்பழம்' என அழைக்கலாம்.

14. கீழுள்ள பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
முத்துச்சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும்
பாசிமூடிய பவளத்தின் நிறமும், பாசியில் மறைந்த
மதியின் துலக்கமும், கூடை கவிழ்ந்த
விளக்கின் ஒளியும் போல் நம்மை மூடிக்கொண்டிருக்கும்
அறியாமை என்னும் இருள்.
- இப்பத்தியில் அமைந்துள்ள உவமைகளை எடுத்தெழுதுக.

15. இயல்பு வழக்கின் வகைகளை எழுதிச் சான்று தருக.

16. வினைமுற்று, வினையெச்சம் - விளக்குக.

17. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

18. மாணவர்களிடம் பேச்சாற்றலை வளர்க்க நீவிர் பின்பற்றும் வழிமுறைகள் யாவை?

## பகுதி - ஆ

III. கீழ்க்காணும் ஒவ்வொரு வினாவிற்கும் 100 **சொற்களுக்கு** மிகாமல் விடையளிக்க. **10x2=20**

19. பாடநூல் ஆய்வின் புறஅமைப்புப் பண்புகளைக் கூறுக.

20. சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

21. பாட ஏற்பாட்டின் இயல்புகள் ஏதேனும் நான்கினைத் தருக.

22. 'அறுசுவை' - தொகைச் சொல்லை விரித்து எழுதுக.

23. படைப்பாற்றல் என்றால் என்ன?

24. தொல்காப்பியர் கூறும் செய்யுள் உறுப்புகள் ஏதேனும் நான்கினை எழுதுக.

25. உலகத் தமிழ் இணைய முதல் மாநாடு எங்கு, எப்பொழுது நடைபெற்றது?

26. பிழை-தவறு இரண்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

27. மாணவர்களின் வாய்மொழித் தேர்வில் எத்தகைய மொழி கூறுகளை மதிப்பீடு செய்யலாம்?

28. ஒப்புமையாக்கப் பிழை என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.

IV. எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. **5x4=20**

29. பாடங்களைப் பயன்படுத்திச் சொற்களஞ்சியத்தை எவ்வாறு பெருக்கலாம்?

30. 'பா' வகைகளையும் அவற்றுக்குரிய ஓசைகளையும் எழுதுக.

31. வேற்றுமைப் பிழைகளின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

32. வரிவடிவப் பிழை என்றால் என்ன? நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

33. மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தில் பின்பற்றப்படும் கற்றல் கற்பித்தல் வகைகளை எழுதுக.

34. மொழிப்பயிற்றாய்வுக் கூடத்தில் நடைபெறும் பயிற்சிகள் பற்றி குறிப்புத் தருக.

35. நல்ல பாடத்திட்டத்தின் கூறுகள் யாவை?

36. கணினி உதவியுடன் மொழிக் கற்றலின் பயன்கள் யாவை?

**V.** ஒவ்வொரு வினாவுக்கும் **500** சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க. **2x10=20**

**37.** (அ) தொடை என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தின் அமைப்பை விளக்குக. மொழிக் கற்பித்தலுக்கு மொழிப் பயிற்றாய்வுக் கூடத்தை எவ்வாறு பயன்படுத்துவீர்?

**38.** (அ) அடைவுத் தேர்வின் வகைகளை விளக்கி, அவற்றின் நிறை குறைகளைப் பட்டியலிடுக.

**அல்லது**

(ஆ) மொழிப்பாட நூலின் இலக்கணம், அமைப்பினைப் பற்றி எழுதுக. இவற்றின் அடிப்படையில் ஐந்தாம் வகுப்பு தமிழ்ப் பாடநூல் பற்றிய நும் கருத்துக்களைத் தருக.

-oOo-